# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2052 ● செப்டம்பர் 25, 2021 Weekly E-paper ● September 25, 2021




## விழிப்பார்களா இதரப் பிற்படுத்தப்பட்ட மக்கள்?

● மதிவாணன்

**மரமா? நாணலா? மோடியரசு !**

எழில்.இளங்கோவன்

**அவளைப் பெண்ணாகப் பாருங்கள் !**

தலையங்கம்

**இந்தியத் தத்துவச் சிந்தனையில் வேத மரபும் வேத மறுப்பும்**

நூல் திறனாய்வு: மா.உதயகுமார்

கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2052 ● செப்டம்பர் 25, 2021 Weekly E-paper ● September 25, 2021


# விழிப்பார்களா இதரப் பிற்படுத்தப்பட்ட மக்கள்?

● மதிவாணன்

உச்ச நீதிமன்றத்தில், இதரப் பிற்படுத்தப்பட்டவர்களைக் கண்டறியும் கணக்கெடுப்பு நடத்துவது கடினம் என்று ஒன்றிய அரசு கைவிரித்துள்ளது.

அரியவகை ஏழைகளைப் (EWS) போகின்றபோக்கில் கண்டுபிடிக்கத் தெரிந்த ஒன்றியத்திற்கு இது மட்டும் முடியாதா? NRC-CAA, குடியுரிமை போன்றச் சிக்கலானக் கணக்கெடுப்புகளை எடுக்க விரையும் ஒன்றியத்தால், இந்தக் கணக்கெடுப்பை எடுக்க இயலாதா? அது சிக்கலானது சிரமானது என வர்ணனைகள் மட்டுமே தொடர்கதை ஆகின்றன..

ஒரு நாட்டில் அனைவரின் பங்களிப்பும் இருக்க வேண்டும். ஆனால் பெரும்பான்மையாக இருக்கும் இதரப் பிற்படுத்தப்பட்டவர்களை இன்னும் எத்தனை நாள்களுக்குப் பார்வையாளராகவே வைத்திருக்கப் போகிறார்கள்?



ஆதார் அட்டையை அனைவருக்கும் கொடுக்க முயலும் அரசிடம் இந்த அட்டை எதற்கு என்று கேட்டால், எதற்கும் கட்டாயம் கிடையாது என்று சொல்கிறது. எதற்கும் கட்டாயத் தேவையில்லாத ஆதார் அட்டைக்குச் செலவு செய்ய முடிகிற அரசால், அவசியமான சாதிவாரிக் கணக்கெடுப்பைச் செய்ய முடியவில்லை.

## விழிப்பார்களா இதரப் பிற்படுத்தப்பட்ட மக்கள்?

பிற்படுதத்தபட்டச் சமூகங்கள் யார் என்று தெரிந்து கொள்வதில் சிக்கல் இருப்பதாக ஒன்றிய அரசு கூறுகின்றது, ஆனால் அது குறித்து இதரப் பிற்படுதத்தபட்ட மக்களிடம் ஒரு உரையாடலைக் கூடப் பார்க்க முடியவில்லை என்பது கூடுதல் வருத்தம். இட ஒதுக்கீடு என்பதைக் கௌரவக் குறைச்சலாகப் பார்க்கும் மக்களின் மனநிலை மாற வேண்டும். இட ஒதுக்கீடு குறித்துப் பேசினாலே அது பட்டியலின மக்களுக்கானது, தகுதி திறமைக்கு எதிரானது என்பன போன்ற மேம்போக்கான பேச்சுகளுடன் நகருகின்றனர்.

இட ஒதுக்கீடு இதரப் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு 27% இருக்கிறது; அது மேலும் அதிகரிக்கப்பட வேண்டும். ஆனால் இட ஒதுக்கீடு குறித்து பேசினாலே, பட்டியலின இட ஒதுக்கீட்டை இகழும் இதரப் பிற்படுத்தப்பட்டவர்கள் மனநிலை என்பது, தனக்கு இரு கண் போனாலும் பரவாயில்லை, பட்டியலின மக்களுக்கு ஒரு கண்ணாவது போக வேண்டும் என்ற மனநிலையையே காட்டுகின்றது. இழப்பு தனக்குத்தான் அதிகம் என்பதைக் கவனிக்க மறுக்கின்றனர்.

யார் EWS-க்கு தகுதியானவர்கள் என்று தெரிந்தால், முன்னேறிய சமூகத்தினர் யார் என்று தெரிந்ததாகவே பொருள். யார் பட்டியலினத்தவர்கள் என்று சரியாக வரையறுக்கப் பட்டுவிட்ட நிலையில், மீதம் இருப்பவர்கள் யார் என்று தெரியவில்லை என்று ஒன்றிய அரசு தொடந்து கூறி வருகின்றது. மாநில அரசு முயற்சித்தால், உடனே வழக்குத் தொடந்து அதை முடக்கிவிடுகின்றார்கள்.

நாடு தழுவிய அளவில் ஒன்றிய அரசே இதனைச் செய்ய வேண்டும். ஆனால் ஒன்றிய அரசு தொடர்ந்து வேடிக்கைப் பார்க்கிறது. மக்களும் ஒன்றிய அரசைத் தொடர்ந்து வேடிக்கைப் பார்கிறார்கள்.

## இடஒதுக்கீடே பாதுகாப்பு:

இதரப் பிற்படுத்தப்பட்டவர்கள் தாங்கள் ஒதுக்கப்படும் அடிப்படை புரியாமல் இருக்கின்றனர். IIT போன்ற ஒன்றியத்தின் கீழ் வரும் நிறுவனங்களில் பார்ப்பனர்கள் தவிர, OBC, SC/ST அனைவரும் சாதியப் பாகுபாட்டுக்கு உள்ளாகிறார்கள். மாணவர்கள்/ஆசிரியர்கள் இடைநின்றுவிடுகின்றனர். சிலர் தற்கொலைசெய்துக்கொள்கின்றனர். இங்கு கவனிக்கப்பட வேண்டியது யாதெனில், இந்த நிறுவனங்களில் இட ஒதுக்கீடு சரிவர பின்பற்றப்படுவதில்லை. பின்பற்றப்பட்டால், இந்த மக்கள் அதிக அளவில் இடம் பெறுவார்கள். எண்ணிக்கையே இவர்களுக்கானப் பாதுகாப்பைக் கொடுக்கும்.

## ஏன் சாதிவாரிக் கணக்கெடுப்பு தேவை?

இதரப் பிற்படுத்தப்பட்டவர்கள் எல்லோரும் ஒரே நிலையில் இருப்பதில்லை. பெரு நிலக்கிழார்கள், ஏழை குடியானவர்கள், சிறு உழவர்கள், உள்நாட்டிற்குள்ளேயே புலம்பெயர்ந்து வாழ்பவர்கள் என சமூகத்தில் பல நிலைகளில் இருக்கும் மக்களை ஒரே அளவில் வைத்துப் பார்ப்பது அநீதியாகும். ஒவ்வொருவரின் கல்வி, பொருளாதாரம், சமூக அந்தஸ்து ஆகிய நிலைகளை அறிந்து, அனைத்து மக்களின் பங்களிப்புடனான நாட்டைக் கட்டி எழுப்ப வேண்டும். அப்படிப்பட்ட நாடே வளர்ச்சி அடையும். ●

# மரமா? நாணலா? மோடியரசு!

● எழில்.இளங்கோவன்

"உழுவார் உலகத்தார்க்(கு) ஆணி" என்றும், "உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாம் தொழுதுண்டு பின்செல் பவர்" என்றும் உழவின் பெருமையையும், உழவர் பெருமையையும் உயர்த்திப் பேசியவர் திருவள்ளுவர்.

தமிழ்நாட்டுக்கு வரும்போது ஏதாவது ஒரு திருக்குறளைச் சொல்லி நடித்து விட்டுப்போகும் ஒன்றிய அரசின் பிரதமர் நரேந்திர மோடிக்கு இப்படிப்பட்டக் குறட்பாக்கள் எல்லாம் தெரிந்திருக்க முடியாது.

அதனால்தான் வேளாண் மக்களுக்கும், வேளாண்மைக்கும் எதிராக நாடாளுமன்றத்தில் நிறைவேற்றியுள்ளார் மூன்றுத் திருத்தச் சட்டங்களை.

இக்கொடுமையானச் சட்டத்தைத் திரும்பப் பெறக்கோரிக் கடந்தப் பதினொரு மாதங்களைத் தாண்டி இன்றும் போராடிக் கொண்டிருக்கிறார்கள் பஞ்சாப், அரியானா உள்ளிட்ட வேளாண் பெருங்குடி மக்கள்.

இலட்சக்கணக்கான மக்கள் தலைநகர் டில்லியை முற்றுகையிட்டுப் போராடி வரும் நிலையில், ஆறுதலுக்காக ஒருமுறை கூட இவர்களைச் சந்தித்துப் பேச முன்வரவில்லை, மோடி. ஏறத்தாழ 600க்கும் மேற்பட்டோர் இப்போராட்டக் களத்தில் உயிரை இழந்துள்ளார்கள்.

பிரதமர் மோடியும், உள்துறை அமைச்சர் அமித்ஷாவும் கார்ப்பரேட் கம்பெனிகளுக்கு ஒன்றிய அரசின் பொதுத்துறை நிறுவனங்களை விற்பதும், அவைகளுக்கு "விசுவாசமாக " நடந்து கொள்வதும் வழக்கமாகி விட்டது.

அப்படித்தான் இந்நாட்டின் வேளாண்மையைக் கார்ப்பரேட்டுகளின் காலடியில் கொண்டு போய்ச்சேர்க்க இத்திருத்தச் சட்டங்கள் வழிவகை செய்கின்றன. இதனால் வருங்காலங்களில் வேளாண் மக்கள் மிகப்பெரும் பாதிப்புக்கு ஆளாவார்கள். எதிர்காலத்தில் வேளாண்



தொழில் என்பதே கேள்விக்குறியாகி விடும் நிலை உருவாகி இருக்கிறது.

மக்களின் அழுகுரல் மோடியின் காதில் ஏறவில்லை என்பது ஒருபுறம் இருந்தாலும், நாடாளுமன்றத்திலாவது இச்சட்டம் குறித்து எதிர்க்கட்சிகளுடன் பேச ஒத்துழைக்க வேண்டும், மோடி. அதற்கும் அவர் முன்வருவதாகத் தெரியவில்லை.

இந்நிலையில் வேளாண் மக்களின் போராட்டத்தை உதாசீனப்படுத்துவதையும், வேளாண் விரோதச் சட்டங்களைத் திரும்பப் பெறக்கோரியும் 27-09-2021 அன்று இந்திய ஒன்றிய அளவில், நாடு தழுவிய போராட்டத்தை அறிவித்து, ஆதரவையும் வேண்டியுள்ளது ஒன்றுபட்ட வேளாண் முன்னணியான "சம்யுக்தா கிசான் மோர்ச்சா" என்ற அமைப்பு.

இப்பேராட்டத்திற்குத் திராவிட முன்னேற்றக் கழகம், திராவிடர் கழகம், காங்கிரஸ் கட்சி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, இந்திய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, மறுமலர்ச்சி தி.மு.க, விடுதலைச் சிறுத்தைகள் கட்சி, திராவிட இயக்கத் தமிழர் பேரவை உள்ளிட்ட முற்போக்கு அமைப்புகள் எல்லாம் முழுமையான ஆதரவைக் கொடுத்துள்ளன. ஒன்றிய அளவிலும் எதிர்க்கட்சிகளின் ஆதரவும் இப்போராட்டத்திற்கு வலிமை சேர்க்கின்றன.

வளையாமல் நிற்கும் மரமும் வலிமையான புயலில் வீழ்ந்து விடும். நாணல் வளைந்து கொடுத்து நிமிர்ந்து நிற்கும். அரசு அதிகாரத்தை விட மக்களின் கோபம் வலிமை வாய்ந்தது.

மூன்று வேளாண் சட்டங்களைப் பிரதமர் மோடி அரசு திரும்பப் பெற வேண்டும்.

"நாடொறும் நாடி முறைசெய்யா மன்னவன்
நாடொறும் நாடு கெடும்" .

திருவள்ளுவர்.

# பெரியார் திடலில் அனைத்துக் கட்சிக் கூட்டம்

பல கட்டப் போராட்டங்கள் நடத்தியும் அதற்கான விடிவு காலம் பிறக்கவில்லை என்பதால், இனியும் "நீட்" என்ற பெயரால் நம்மாணவச் செல்வங்களை இழக்கும் கொடுமைகளுக்கு ஒரு முற்றுப் புள்ளி வைக்க வேண்டும் என்பதற்காகத் திராவிடர் கழகத் தலைவர் மானமிகு ஆசிரியர் தலைமையில் நீட் தேர்வை




அடியோடு ஒழித்துக்கட்டுவது என்ற முயற்சியில் அனைத்துக் கட்சிக்கூட்டத்தை 21-09-2021 அன்று பெரியார் திடலில் திராவிடர் கழகம் கூட்டியிருந்தது.

அக்கூட்டத்தில் திராவிட முன்னேற்றக் கழகம் சார்பாகத் துணைப் பொதுச் செயலாளர் ஆ. ராசா, காங்கிரஸ் சார்பாக கோபண்ணா, விடுதலைச் சிறுத்தைகளின் சார்பாக அதன் தலைவர் தொல்.திருமாவளவன், இந்திய கம்னியுனிஸ்ட் கட்சியின் சார்பாக பாலகிருஷ்ணன், மார்க்சிஸ்டு கட்சியின் சார்பாக மருத்துவர் ரவீந்தரன், ம.தி.மு.க. சார்பாக வந்தியத்தேவன், திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் சார்பாகப் பொதுச்செயலாளர் பேராசிரியர் சுப. வீரபாண்டியன், துணைப் பொதுச் செயலாளர் ஆ.சிங்கராயர், இந்திய யூனியன் முஸ்லீம் லீக் பொதுச் செயலாளர் அபூபக்கர், மனித நேய மக்கள் கட்சியின் தலைவர் பேராசிரியர் ஜவாஹிருல்லா, பேராசிரியர் கருணாநிதி, கல்வியாளர் பிரின்ஸ் கஜேந்திர பாபு ஆகியோரும், தமிழக வாழ்வுரிமைக்கட்சி உள்ளிட்ட பிற அமைப்புகளும் கலந்து கொண்டன.

இக்கூட்டத்தில் இன்றைய தி.மு.கழக ஆட்சியில் நீதியரசர் ஏ.கே ராஜன் தலைமையிலான குழு "நீட் தேர்வு" குறித்து அளித்த அறிக்கையைச் சுட்டிக் காட்டி, சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்டத் தீர்மானத்தை வரவேற்றும், அத்தீர்மானத்தைகுடியரசுத்தலைவர் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. ●

## ஒசூரில் கருத்தரங்கம்

கிருஷ்ணகிரி மாவட்டம், ஒசூர் நகரம், பாகலூரில் 29-09-2021 அன்று திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் ஏற்பாட்டில் “சமூக நீதி நாள் கருத்தரங்கம்” நடைபெற உள்ளது. மாவட்டச் செயலாளர் தோழர் தினேஷ் தலைமையில், தலைமை நிலையச் செயலாளர் முன்னிலையில் நடைபெறும் இக்கருத்தரங்கில் துணைப் பொதுச் செயலாளர் தோழர்கள் ஆ.சிங்கராயர், இக்லாஸ் ஆகியோரின் கருத்துரையைத் தொடர்ந்து பொதுச்செயலாளர் தோழர் சுப.வீரபாண்டியன் நிறைவுரை நிகழ்த்துகிறார்.



## பெங்களூரில் தி.மு.க முப்பெரும்விழா

கர்நாடக மாநிலம், பெங்களூரில் 26-09-2021அன்று,அம்மாநில அமைப்பாளர் நா.இராமசாமி தலைமையில், திராவிட முன்னேற்றக் கழகத்தின் முப்பெரும்விழா நடைபெறுகிறது.

இவ்விழாவில் ஆற்காடு அன்பழகன் எழுதிய “மகளிர் மணிமகுடம்” என்ற நூலை வெளியிட்டுச் சிறப்புரை நிகழ்த்துகிறார் திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் பொதுச் செயலாளர் சுப. வீரபாண்டியன் அவர்கள்.




தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!

# கருஞ்சட்டைத் தமிழர்

## அவளைப் பெண்ணாகப் பாருங்கள் !



அண்மையில் தாம்பரம் இரயில் குடியிருப்புக்குச் செல்லும் வழியில் ஒரு கல்லூரி மாணவியின் கழுத்தை அறுத்துக் கொன்று விட்டுத், தானும் தற்கொலை செய்ய முயன்றுள்ளான் ஒருவன் என்ற செய்தி தொலைக்காட்சியில் வெளியானது.

அவர்கள் இருவரும் ஒருவரை ஒருவர் காதலித்து வந்துள்ளனர். காதல் வரவேற்கத் தக்கது தான். ஆனால் அந்தப் பெண் சூழல் காரணமாகப் பேசுவதைத் தவிர்க்க நினைத்த போது அவளை, அவன் கொலை செய்கிறான்.

ஏன் பெண்கள் மட்டும் பாதிக்கப்படுகிறார்கள்?

அவர்கள் பெண்கள், ஆண்கள் சொல்வதைக் கேட்டு நடக்க வேண்டிய போகப்பொருள்கள் என்ற ஆணாதிக்கச் சிந்தனைதான் காரணம்.

இத்தகையப் பாடத்தை, சிந்தனையை ஆண்களின் மண்டையில் இச்சமூகம் திணிப்பதும், அதற்குள் சாதி ஒளிந்து கொண்டிருப்பதும் இன்னொரு காரணம்.

ஆணவக் கொலையானாலும், காதலனுக்குப் பிடிக்கவில்லை என்றாலும் பெண்தான் பெரும் பாதிப்புக்கு ஆளாகி விடுகிறாள்.

பெண்ணை யாரும் தாயாகவும், தங்கையாகவும், அக்காவாகவும், ஏன் கடவுளாகவும் கூட நினைக்க வேண்டாம்.

அவளை ஒரு பெண்ணாக (மனுஷியாக) அவளின் உணர்வுகளைப் புரிந்து கொள்ளும் தோழமையாகப் பார்த்துப் பேசினாலே போதும், துன்பம் தொலையும், இன்பம் கூடும், உள்ளம் தெளிவு பெறும்.

காதலில் இணைவதும், பிரிவதும் அவரவர் விருப்பத்தைப் பொறுத்தது என்ற உரிமையைக் காதலர்கள் உணர்ந்து கொண்டால், அங்கே கொலைக் கருவிகளுக்கு வேலையில்லாமல் போய்விடும்.

ஆசிரியர்
சுப.வீரபாண்டியன்

பொறுப்பாசிரியர்
எழில். இளங்கோவன்

ஆசிரியர் குழு
உதயகுமார்
வெற்றிச்செல்வன்,
சாரதா தேவி

வெளியீடு:
திராவிட இயக்கத் தமிழர் பேரவை

இணையதளம்
www.keetru.com
www.karunchattaibooks.com

மின் அஞ்சல்
karunchattai@gmail.com

டுவிட்டர்: suba_vee

தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை - 600 024

தொலைபேசி: 044-2472 6408

நூல் திறனாய்வு

# இந்தியத் தத்துவச் சிந்தனையில் வேத மரபும் வேத மறுப்பும்

● மா. உதயகுமார்

கடவுள் உண்டு என்று சொல்லத் தொடங்கிய காலத்திலேயே கடவுள் இல்லை என்கிற குரல்கள் ஒலிக்கத் தொடங்கின. அதேபோல் “வேதங்கள்” என்று சொல்லப்படும் பார்ப்பனர்களின் பழைய நூல்கள் இயற்றப்பட்டக் காலந்தொட்டே அவ்வேதங்களை மறுத்தவர்களும் இருந்துவந்திருக்கின்றனர். அவர்களைத்தான் பார்ப்பனர்கள் “நாத்திக வேத நிந்திக” என்று குறிப்பிடுகிறார்கள்




ஒவ்வொரு காலகட்டத்திலும் பார்ப்பனியத்தைஎதிர்த்துஉருவாகியதத்துவச் சிந்தனைகளில், வேத மரபும் வேத மறுப்பும் எவ்வாறு அமைந்திருக்கின்றன என்பதைப் பற்றிஎளியவடிவிலும்அனைவரும்விளங்கிக் கொள்ளும் வகையிலும் வெளிவந்திருக்கும் நூல்தான் “இந்தியத் தத்துவச் சிந்தனையில் வேத மரபும் வேத மறுப்பும்”. எழுத்தாளர் எழில்.இளங்கோவன் அவர்களின் இந்நூலைக் கருஞ்சட்டைப் பதிப்பகம் வெளியிட்டிருக்கிறது.

இந்தியா என்னும் அமைப்பில் சாதி எப்படிச் சமூக முன்னேற்றத்திற்குத் தடையாக இருந்து வருகிறது என்பதை வரலாற்று ரீதியாகப் பார்க்க வேண்டுமானால், அது எந்தத் தத்துவத்தின் அடிப்படையில், யாரால் எந்தக் காலம் தொட்டு உருவாக்கப்பட்டுப் பாதுகாக்கப்பட்டு வருகிறது என்பதை அறிந்து கொள்வது அவசியம். அதனால் தத்துவார்த்த ரீதியாக இங்கு நிலைப்பெற்றிருக்கும் வாழ்வியலை அதன் வரலாற்றை உள்வாங்கிக் கொள்ள வேண்டும். அதற்கு இந்நூல் பெரிதும் துணைபுரியும். இந்தியத் தத்துவச் சிந்தனைகள் பற்றிய, தேவிபிரசாத் சட்டோபாத்தியாயா போன்ற அறிஞர்களின் பெரிய பெரிய ஆய்வு நூல்களைத் தனித்தனியே படித்துத் தெரிந்து கொள்வது என்னும் கடினமானப் பணியை எளிமையாக்கித் தந்திருக்கிறார் இந்நூலில் நூலாசிரியர் எழில்.இளங்கோவன் அவர்கள்.

தத்துவ நூல்களின் ஆழ்ந்த வாசிப்போடு, மணிமேகலை, நீலகேசி, தொல்காப்பியம், புறநானூறு போன்ற பழந்தமிழ் இலக்கியங்களின் புலமையும்நூலாசிரியரின் ஆய்வுகளுக்குக் கூடுதல் வலுசேர்க்கின்றன.

எப்படி, கடவுள் நம்பிக்கை என்பது மனிதருக்கு மனிதர் அளவில் மாறுபடுகிறதோ, அதேபோல் ஒவ்வொரு தத்துவச் சிந்தனையிலும் வேத மரபும் வேத மறுப்பும் வெவ்வேறு அளவுகளில் மாறுபடுகின்றன. பல்வேறு தத்துவங்களிலும் வேத மரபு என்பது பெரும்பாலும் அத்தத்துவத்தின் பிற்கால நூல்களில் இடம் பெற்றிருப்பதைச் சான்றுகளோடு சுட்டிக்காட்டும் ஆசிரியர், வேத மரபு என்பது எவ்வாறு இடைச்செருகலாக வந்து சேர்ந்திருக்கிறது என்பதையும் விளக்குகிறார்.

கடவுளால் உண்டாக்கப்பட்டதுதான் உலகம் என்னும் கருத்து முதல் வாதத்தை அறிவார்ந்த வாதங்கள் மூலம் ஒதுக்கித்தள்ளிய பல்வேறு தத்துவங்களிலும் பின்னாட்களில் வேதத்தின் சாயல் வந்து சேர்கிறது. அனைத்துத் தத்துவங்களையும் அதன் மூலத் தத்துவம் என்றும் பிற்காலத் தத்துவம் என்றும் பிரித்துப் பார்க்க வேண்டியதன் முக்கியத்துவத்தை நூலாசிரியர் அனைத்து இயல்களிலும் குறிப்பிட்டுக் காட்டுகிறார்.

வேதம், உபநிடதம், பிரம்ம சூத்திரம் போன்ற பார்ப்பனத் தத்துவங்களை முதலில் எளிமையாக விளக்கி விட்டு இந்தத் தத்துவங்களோடு வாதம் புரிந்த மற்ற தத்துவங்களை அறிமுகப்படுத்துகிறார். அறிவியல் வளர்ச்சி ஏற்பட்டிராத அந்தக் காலத்திலும் வலிமையான கடவுள் மறுப்பு உரையாடல்கள் நடைபெற்றிருப்பதை சாங்கியம், பௌத்தம், சமணம், மீமாம்சம், நியாய வைசேடிகம், ஆசிவகம், உலகாயுதம் போன்ற சித்தாந்தங்களில் நாம் காணமுடிகிறது. ஆனால் தத்துவச் சிந்தனைகளாக எழுப்பப்பட்டக் கேள்விகள் பொருள்முதல்வாதத்தை முன் வைத்தாலும், அச்சமயங்கள் அல்லது மதங்கள் வரையறுக்கும் சூத்திரங்கள் கருத்து முதல்வாதத்தைச் சொல்பவையாக இருக்கின்றன.

இத்தத்துவச் சிந்தனைகள் பலரால் பல காலங்களில் மாற்றத்திற்கு உள்ளாகி இருக்கின்றன என்பதையும் பின்னால் வந்த உரையாசிரியர்கள் பல்வேறு பொருள்களை மாற்றி உரை எழுதி இருப்பதையும் நூலாசிரியர் சான்றுகளோடு விளக்குகிறார். குறிப்பாக, சாங்கியத்தில் 24 தத்துவ பொருள்களுடன் 25 ஆவதாக ‘புருஷன்’ என்ற ஆன்மாவைக் கொண்டுவந்து சேர்த்தது பொருந்தாதது என்று ஆசிரியர் குறிப்பிடுகிறார். “சாங்கியக் காரிகை”, “சங்கியச் சூத்திரம்” ஆகிய சாங்கிய நூல்கள் வேத மரபுக்கு ஆதரவாக இருப்பதையும் இந்நூல்களுக்கு உரை எழுதியவர்கள் வேத சிந்தனைகளைப் புகுத்தி வேத மரபுக்கு ஆதரவாக மாற்றியதையும் விளக்கி இது பிற்காலச் சாங்கியம் என்றும் நிறுவுகிறார்.

சடங்குகள் அல்லது வாழ்வியல் முறை என்று வரும்போது உலகாயதம் தவிர்த்த மற்ற சமயங்கள் அல்லது மதங்கள், குறிப்பாக நிறுவனமயமாகி இன்றுவரையிலும் நிலைத்திருக்கும் பௌத்தம் சமணம் ஆகியன, அவற்றின் மூலத் தத்துவங்களுக்கு முரணாக இயங்கிவருவதையும் காணமுடிகிறது. பல்வேறு தத்துவச் சிந்தனைகள் பற்றிச் சொல்லியிருக்கும் நூலாசிரியர் வேத காலத்தில் இருந்து தொடங்கி கிபி 10-11ஆம் நூற்றாண்டு வரையிலான தத்துவச் சிந்தனைகளைச் சொல்லியிருக்கிறார்.

ஒவ்வொரு காலகட்டத்திலும் பார்ப்பனர்கள் அனைத்துச் சித்தாந்தங்களையும் சிதைத்து அழிப்பது அல்லது உள்வாங்கிக் கொள்வது என்கிற சூழ்ச்சியைக் கையாண்டு வந்தனர். அதன் தொடர்ச்சியாக வந்திருக்கும் இன்றைய மத்திய அரசு, தகவல் தொழில்நுட்பம் அறிவியல் வளர்ந்த இந்தக் காலகட்டத்திலும் கூட, அத்தகைய சூழ்ச்சியைத் தொடர்ந்து செய்து வருகிறது. அண்மையில் யுஜிசி சொல்லியிருக்கும் வரலாற்றுப் பாடத்திட்டத்திற்கான வழிகாட்டுதல்களில், ஒற்றைத்தன்மை கொண்டதாக, இந்து-முஸ்லிம்-பிரிட்டிஷ் என்ற மூன்று பெரும் பிரிவுகளில் வரலாற்றை எழுதத் தொடங்கியிருக்கிறார்கள். வேத மரபையும் வேத மறுப்பையும் ஒன்றாக்கி, முகலாயர் ஆட்சிக்கு முன்னர் ஒற்றை இந்து நாடாகவும் ஒற்றை இந்து மதமாகவும் வரலாற்றை எழுதுகின்றனர். இதுபோன்ற திரிபுகள் நடைபெற்று வரும் வேளையில், இந்தியத் தத்துவச் சிந்தனை என்றும் ஒன்றாக இருந்தது இல்லை, அவை பலவாக இயங்கி வந்திருக்கின்றன, பல்வேறாக இருந்த போதும் தத்துவ அடிப்படையில் முரண்பட்டு மோதிக்கொண்டுதான் அவை இயங்கி வந்திருக்கின்றன என்பதை நிறுவியிருக்கும் இந்நூல் அனைவரும் குறிப்பாக இளைஞர்கள் அரிச்சுவடியாகக் கற்க வேண்டிய நூலாகும்.

நூல் பெயர்: இந்தியத் தத்துவ சிந்தனையில் வேத மரபும் வேத மறுப்பும்
ஆசிரியர் : எழில்.இளங்கோவன்
விலை : ரூ.110
வெளியீடு : கருஞ்சட்டைப் பதிப்பகம்
தொடர்புக்கு: 044 24726408 / 9940407468